
# திராவிடத்தால் வாழ்கிறோம்

976

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

83

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**



# தலைநகரைத் தலைநிமிர்த்திய கழகம்!

ஓர் அரசியல் இயக்கமோ அல்லது அரசியல்வாதியாகும் நடிகர்களோ எப்படி இருக்க வேண்டும் என, தொண்டர்களுக்கும் மக்களுக்கும் தன் தொடக்கக் காலத்திலேயே வெளிக்காட்டிய இயக்கம் தி.மு.கழகம். அதை, வெளிக்காட்டிய மாநாடு 1959-இல் நடைபெற்ற சென்னை மாவட்ட தி.மு.க. மாநாடு. அக்டோபர் 17, 18 ஆகிய தேதிகளில் மயிலாப்பூரை அடுத்த மந்தைவெளியில் இம்மாநாடு நடைபெற்றது. ஐம்பதாயிரம் பேருடன் தொடங்கிய ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை அடையும்போது, ஒரு லட்சம் பேரை எட்டியிருந்தது.

மாவீரர் பாலசுப்பிரமணியம் பந்தலில் மொய்தீன் பிச்சை அரங்கில் மாநாடு தொடங்கியது. கோ.செங்குட்டுவன் வரவேற்புரை வாசித்தார். கே.எம்.கண்ணபிரான், இளஞ்சேரலாதன் ஆகியோர் மாநாட்டுச் செயலாளர்களாகப் பணியாற்றினர். மாநாட்டுக்கு வசூலான கட்டணத்தொகை மட்டுமே ஐம்பதாயிரம் ரூபாய் என்கிறது தென்னகம் ஏடு.

மாநாட்டைத் திறந்துவைத்த இராம. அரங்கண்ணல், “நேரு அவர்களுக்கு கருப்புக்கொடி காட்டப்பட்டபோது, நமது மொய்தீன் பிச்சையைக் காலால் மிதித்துக் கொன்றார்கள். அப்படிப்பட்ட மொய்தீன் பிச்சையின் பெயரை இந்த அரங்குக்குச் சூட்டியிருப்பது மிக மிகப் பொருத்தமானதாகும்” என்று கூறியபோது, கூட்டத்தார் கண்களில் கண்ணீர் ததும்பியது. மாநாட்டின் தலைவர் டி.கே.சீனிவாசன், அன்றைய ஆட்சியாளர்களின் அட்டூழியங்களையும், தென்னாடு படும் அவதிகளையும் படம் பிடித்துக் காட்டி, சபையோரின் உணர்வுகளைத் தட்டி யெழுப்பினார்.

கலைத்துறைக்கும் தி.மு.க.வுக்கும் உள்ள தொடர்பு குறித்து, மிக நுட்பமாக தனது சிறப்புரையில் விவரித்த பேரறிஞர் அண்ணா, நடிப்பிசைப் புலவர் கே.ஆ.இராமசாமியின் இயக்கத் தொண்டினை வெகுவாகப் பாராட்டினார். “இதோ நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி இருக்கிறார். அவர் தூத்துக்குடி முதல் சென்னை துறைமுகப் பட்டினம் வரை கழகத்திற்காக நாடகங்கள் நடித்து வந்திருக்கிறார். அவர் போகாத ஊர் இல்லை. நாடகம் நடிக்காத நகரமில்லை. அவர் நடிக்காத நாடகமில்லை. இருந்தாலும், அவர் வசிக்கும் வீடு சொந்த வீடு அல்ல, வாடகை வீடுதான்” என்று கே.ஆர்.இராமசாமி, தான் ஏற்றுக்கொண்ட லட்சிய உறுதியோடு, கொள்கைப் பற்றோடு தி.மு.க.வுக்கு ஆற்றிவரும் பணிகளைச் சுட்டிக்காட்டி பாராட்டினார்.

லட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன், எம்.ஜி.ஆர். என முன்னோடி நடிகர்களாக இருந்த தி.மு.க.வினரும் மாநாட்டில் பங்கேற்று சிறப்பித்தனர். முதல் நாளில், சி.எஸ்.ஜெயராமன், நாகூர் ஹனீபா ஆகியோரின் இன்னிசை நிகழ்ச்சிகளும், முத்தமிழறிஞர் கலைஞரின் ‘உதயசூரியன்’ நாடகமும்



தொண்டர்களுக்கு சிறப்பு விருந்தாய் அமைந்தன. இரண்டாம் நாளில் திருச்சி நாவலர் மன்றத்தின் ‘பரப்பிரம்மம்’ நாடகம் நடைபெற்றது.

மாநாட்டில் பங்கேற்ற லட்சக்கணக்கானோரில் பல்லாயிரக்கணக்கானோர் பெண்கள். செலவு போக மிச்சத்தொகை மட்டுமே 30,000 ரூபாய், அதனுடன் எம்.ஜி.ஆர். கொடுத்த 5,000 ரூபாய் சேர்த்து மொத்தம் 35,000 ரூபாய் மீதம் இருந்தது. அன்று, நாட்டில் நிலவிய உணவுச் சிக்கல் குறித்து, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றிய தி.மு. கழகம், இந்த அவலம் தொடருமானால், ஆட்சியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு பொதுச்செயலாளருக்கு வேண்டுகோளும் விடுத்தது.

...கூட்டம் திரளும்

## கேரவன் தலைவர் - வீதியிலுள்ள தொண்டர்கள்!

கரூர் துயரத்தின் சுவடு, மக்கள் மனதில் இருந்து எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மறையாது. கடந்த இரண்டு நாட்களில் சமூக வலைதளங்களில் பலரும் பல கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர். இது பத்திரிகையாளர் தெ.சு.கவுதமன் பதிவு.

‘அந்தக் கட்சியில் ‘கேரவன் தலைவர் – வீதியிலுள்ள தொண்டர்கள்’ என இரு பிரிவுகள் மட்டுமே வெளியே தெரிகிறது. இத்தனை ஆயிரம் பேர் கூடுவார்களென்றால், காவல் துறைக்கும் முன்னதாக அந்தக் கட்சிக்குள்ளேயே ஒரு கட்டமைப்பு இருந்து, ஒருங்கிணைந்து செயல்பட்டு அதை ஒழுங்குபடுத்தியிருக்க வேண்டும். இதனை பெரும்பாலான கட்சிகளில் நாம் காண முடியும். தலைவர் பிரச்சாரத்துக்குச் செல்கிறாரென்றால், கூட்டம் சேர்க்க, ஒழுங்குபடுத்த என இரண்டாம் கட்டத் தலைவர்களின் அணி தீவிரமாக செயல்படும். மாவட்டச் செயலாளர், அப்பகுதி அமைச்சர்கள், கிளைக்கழக நிர்வாகிகள் எனப் பலரும் ஒருங்கிணைந்து, அதற்கான ஏற்பாட்டை முன்னெடுப்பார்கள். இவையெல்லாம் மிக மிக அடிப்படையான விஷயங்கள்.

த.வெ.க. இரண்டாம் கட்டத் தலைவர்கள், தொண்டர்களை, ரசிகர்களை ஒருங்கிணைக்கவில்லை... துயர சம்பவத்துக்குப்பின் அந்தக் கட்சியின் தலைவர் சென்னைக்கு ஓடிவிட்டார். போகட்டும். இரண்டாம் கட்டத்தில் இருந்தவர்கள் எங்கே ஓடினார்கள்? இரண்டாம் கட்ட, மூன்றாம் கட்டத் தலைவர்களைக் களத்தில் செயல்பட உத்தரவிட வேண்டாமா? இதுவா தலைமைப்பண்பு? இந்தத் துயருக்கு நான் பொறுப்பேற்கிறேன் என்று மற்ற தலைவர்களுக்கு முன்னுதாரண மாக இருக்க வேண்டாமா? செம்பரம்பாக்கம் பேரழிவின்போதும், தூத்துக்குடி துப்பாக்கிச்சூட்டின் போதும் அன்றைய ஆட்சியாளர்கள் நடந்துகொண்ட விதத்துக்கும், தற்போது விஜய்யின் செயல்பாட்டுக்கும் என்ன வித்தியாசம்?? தன்மீதான தவறை மறைக்க, காவல்துறை... மின்வாரியம்... உளவுத்துறை... ஆட்சியாளர்கள் மீதெல்லாம் பழிபோடுவது என்ன மாதிரி தலைமைப்பண்பு??


தனது பாதுகாப்புக்காக பவுன்சர்களை வைத்துக்கொண்டு தொண்டர்களைப் பந்தாடிய ஒரே அரசியல்வாதி இவர் தான்! தடுப்புக் கம்பிகளுக்கு கிரீஸ் தடவிய ஒரே அரசியல்வாதி இவர் தான்... மரத்தைச் சுற்றி தகரம் அடித்த ஒரே அரசியல்வாதி இவர் தான். இவரது கட்சியின் அடுத்தகட்டத் தலைவர்கள் எப்படி என்பதற்கு, 100 அடி உயர கொடிக்கம்பம் சாய்ந்தபோதே அப்பட்டமாகத் தெரிந்தது.

வெற்றுசவடால் பஞ்ச் டயலாக் பேசுவதும், அறிக்கை விடுவதும் மட்டுமே அரசியல் அல்ல’ என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



அறந்தாங்கி
வெங்கடேசன்



### இதே நாளில் முத்தமிழறிஞரிடம் பெற்ற வாழ்த்து!

1994-ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதி, சென்னையில் தமிழ்நாடு பார் கவுன்சிலில் நான் வழக்கறிஞராகப் பதிவு செய்தேன். அங்கிருந்து நேராக அண்ணா அறிவாலயம் வந்தேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து சால்வை அணிவித்தேன். ‘பிறந்த நாளா? வாழ்த்துகள்யா’ என்றார். ‘வக்கீலா பதிவு செய்துள்ளேன் அய்யா’ என்றேன். மீண்டும் மகிழ்ச்சியுடன் ‘அப்படியா? வாழ்த்துகள்யா. ‘கட்சிக்காரங்களுக்கு ஆதரவா இரு. புரியுதா?’ என்று புன்னகை செய்தார். “சரிங்க அய்யா” என்றேன். கழகத்தினரையும் என்னிடம் வழக்காட வருபவர்களையும் சேர்த்து, ‘கட்சிக்காரர்கள்’ என்று இருபொருள்படச் சொல்லி முத்தமிழறிஞர் என்னை வாழ்த்தியது என் வாழ்நாளில் மறக்க முடியாது.

–அறந்தாங்கி வெங்கடேசன், வழக்கறிஞர், அறந்தாங்கி.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


83

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# சுயமரியாதை VS சைவம்!

திராவிட இயக்கம் மீதான எதிர்மறை விமர்சனங்கள் எல்லா காலகட்டங்களிலும் தொடர்ந்து நடந்தவண்ணம் இருப்பதென்பது, வெள்ளிடைமலை. அந்த வகையில், வரலாற்று ஆய்வாளர் ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்களின் ‘திராவிட இயக்கமும் வேளாளரும்’ என்ற ஆய்வு நூல் அத்தகைய முன்முடிவுகளுக்கு பதில் சொல்லும் விதமாகவும், வெள்ளாளர்களுக்கும் திராவிட இயக்கத்திற்கும் இடையில் நிலவிய நட்புறவையும் முரண்பாடுகளையும் பகுப்பாய்வு செய்கிறது. காலச்சுவடு பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

1925-இல் காங்கிரஸ் இயக்கத்தை விட்டு விலகிய பெரியார், சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவிக்கிறார். நூற்றாண்டு காணும் சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம் என்பது தமிழ்நாட்டு அரசியலில் முக்கிய மான நிகழ்வு. பகுத்தறிவு இயக்கமாக தன்னை அடையாளப் படுத்திக் கொண்ட சுயமரியாதை இயக்கம் சமூ கத்தில் நிலவிய அனைத்து விதமான பிற்போக்குத்தனங்களையும் கேள்விக்குட்படுத்தியது. இந்தச் சூழலில்தான் சைவ சமய இலக்கியங்களும் விமர்சனம் செய்யப்படுகின்றன. பார்ப்பனர் எதிர்ப்பு மற்றும் வைணவ




எதிர்ப்பு என்கிற அடிப்படையில், சைவர்கள் சுயமரியாதை இயக்கத்தை ஏற்றுக்கொண்டாலும், சைவம் விமர்சிக்கப்படும்போது அதற்கான எதிர்வினை கள் வெவ்வேறு வடிவங்களில் அதன் முக்கிய தலைவர்களால் முன்னெடுக்கப் படுகின்றன.

நவீன பகுத்தறிவு மற்றும் ஜனநாயக கருத்தியல்களை முன்வைத்து, சுயமரியாதை இயக்கம் தனது செயல்பாடுகளை முன்னெடுத்ததன் விளைவாக, சைவ சமயமும் சில மாற்றங்களை அனுசரிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது.

சைவர்களுக்கிடையிலேயே மூன்று பிரிவுகள் உருவாகின. தூய்மைவாதம் (PURISM) பேசிய சைவர்கள், மிதவாதிகள் (MODERATES) மற்றும் சீர்திருத்த (REFORMATIVE) சைவர்கள். இதில் வ.உ.சி சீர்திருத்த சைவர். சுயமரியாதை இயக்கத்தின் சில கொள்கைகளை அவசியமென கருதி, ‘சைவத்தில் மாற்றங்கள் வேண்டும்’ என்றார். தூய்மைவாதம் பேசியவர்கள், சுயமரியாதை இயக்கத்தை வைணவ இயக்கம் என்று விமர்சித்து, மரபார்ந்த சைவத்தை முன்னிறுத்தினார்கள். சுயமரியாதை இயக்க நடவடிக்கைகளால், சைவர்கள் இத்தகைய நெருக்கடிக்கு தள்ளப்பட்டார்கள்.

பார்ப்பனர்கள் இடத்தை தாங்கள் கைப்பற்றிக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைக் கொண்ட சைவர்களை, சுயமரியாதை இயக்கத்தின் இத்தகைய நவீன ஜனநாயக நடவடிக்கை திடுக்கிட வைத்தது. இதன் விளைவாக, பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தில் சைவர்களின் இடம் என்பது விளிம்புக்குத் தள்ளப்பட்டது.

இந்தி எதிர்ப்பு, பார்ப்பனர்/ பார்ப்பனிய எதிர்ப்பு ஆகிய தளத்தில் இவ்விரண்டு இயக்கங்களும் சேர்ந்தே பயணித்தன. ஆனால், இந்த ஒப்பந்தம் என்பது இந்தி எதிர்ப்பு என்ற அடிப்படையில் மட்டும், தான் அமைத்ததே ஒழிய, அதை மீறிய சமரசங்கள் சுயமரியாதை இயக்க தரப்பில் நடைபெறவில்லை.

1944-க்கு பின் திராவிட இயக்கம் என்பது அனைத்து மக்களையும் உள்ளடக்கிய இயக்கமாகவே அறியப்பட்டது. இதன் மூலம் திராவிட இயக்கத்தை வேளாளர் இயக்கம் என்று சொல்லுவது பகுதியளவு கூட உண்மை இல்லை என்பதை தக்க சான்றுகளுடன் நிறுவுகிறார் நூலாசிரியர். மேலும் அந்த கால அரசியல் சூழலின், அடிப்படையிலே இவ்விரு இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைகளும் அமைந்தன என்பதையும் இந்நூல் தெளிவுபடுத்து கிறது.

சுயமரியாதை இயக்க நூற்றாண்டில், அனைவரும் வாசித்து அறிய வேண்டிய நூல் இது!

...வாசிப்போம்.

## நம் வரலாறு

### இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி!

2006-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி அண்ணா பிறந்த நாளில் தமிழ்நாட்டில் இலவச வண்ணத் தொலைக்காட்சித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார் கலைஞர். காஞ்சிபுரம் மாவட்டம், தண்டலம் எனும் ஊரில் உள்ள சமத்துவபுரத்தில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. ரூ.3742 கோடி செலவில், ஒரு கோடியே 72 லட்சத்து 80 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், திட்டம் அமைந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131